செ.வெ.எண்: 38 நாள்: 23.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இடங்கண்ணி, வேம்புக்குடி, குணமங்கலம் மற்றும் அம்பாபூர் ஆகிய கிராமங்களில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (22.03.2017) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்** மூலம் **தேக்குமரக்கன்றுகள் மற்றும் மரக்கன்றுகள் குடிலமைத்து,** சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனைத்தொடர்ந்து தா.பழூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்கனவே நடப்பட்ட **மரக்கன்றுகள் பராமரிக்கப்பட்டு வருவதை** பார்வையிடப்பட்டது.

மேலும், தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேம்புக்குடி, குணமங்கலம் மற்றும் அம்பாபூர் ஆகிய ஊராட்சிகளில் **தாய் II திட்டத்தின்** கீழ் (2016-17) மேற்கொள்ளப்படவுள்ள **3 ஏரிகளை** பார்வையிடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் இடங்கண்ணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் **மாவட்ட ஊரக உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதித்திட்டத்தின்** கீழ் (2016-17) **ரூ.16 இலட்சம்** மதிப்பீட்டில் **3 வகுப்பறைகள்** கொண்ட பள்ளிக்கட்டிடம் இன்று (23.03.2017) திறக்கப்பட்டு, மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்கள் கொண்டு அவர்களையே மரக்கன்றுகள் நடவைத்து, அவர்களையே பராமரித்திட வேண்டும் என அறிவுருத்தப்பட்டது.

மேலும், ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த பணிகள் மற்றும் குடிநீர் சம்மந்தப்பட்ட பணிகளும் போர்கால அடிப்படையில் முடித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமைத் திட்டம் திருமதி.லோகேஸ்வரி, செயற்பொறியாளர் திரு.செல்வக்குமரன், உதவி செயற்பொறியாளர் திரு.அருள்மொழி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.